இணைப்பு I.

(561ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினு எண் 836-க்கான விடையைக் காண்க)

(அ) கோவை லட்சுமி மெசின் ஓர்க்ஸ் நிறுவனத்தில் ஏழு தொழிற் சங்கங்கள் வேலை நிறுத்த அறிக்கை கொடுத்திருந்தபோது, ஒரே யொரு தொழிற் சங்கத்துடன் மட்டும் தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12 (3)ன் கீழ் ஒப்பந்தம் ஏற்பட்டு கதவடைப்பு நீக்கப்பட்டது உண்மையா?

தொழில் தகராறு சட்டம் பிரிவு 12 (3)-ன்கீழ் ஏற்பட்ட 4—9–1977 தேதியிட்ட ஒப்பந்தம் கோவை லட்சுமி மெசின் ஓர்க்ஸ் நிர்வாகத்தினராலும் கீழ்க்கண்ட தொழிற்சங்கங்களாலும் கையொப்பமிடப்பட்டது:—

(1) என்ஜீனியரிங் அண்ணு தொழிலாளர் சங்கம், கோவை.

(2) தேசிய இன்ஜீனியரிங் தொழிலாளர் சங்கம், கோவை,

(3) தேசீய பொது தொழிலாளர் சங்கம், கோவை.

(4) லட்சுமி மெசின் ஓர்க்ஸ் தொழிலாளர் சங்கம், கோவை.

(ஆ) ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள்.

கீழ்க்கண்டவைகள் ஒப்பந்தத்தின் ஷரத்துக்கள்:—

(1) தொழிலாளர்களுக்குரிய 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 தேதி கொடுக்கப்படவேண்டிய 1977-ம் ஆண்டு மே மாத சம்பளம், 1—6—1977 வரையிலான பார்சல் செய்யப்பட்ட மற்றும் பார்சல் செய்யப்படத் தயாராய் உள்ள உற்பத்திப் பொருட்கள் நிறுவனத்தை விட்டு வெளியேறிய 48 மணி நேரம் கழித்தவுடன் உடனடியாக வழங்கப்படும்.

(2) தொழிலாளர்களுக்கு ஒரு வருடத்துக்கு 12 நாட்கள் தற்செயல் விடுப்பு வழங்கப்படும். 1977 ஆம் ஆண்டுக்கான 12 நாட்கள் தற்செயல் விடுப்புக்குப் பதிலாக 12 நாட்களுக்கு உண்டான சம்பளம் கதவடைப்பு நீக்கப்பட்ட இருபது தினங் களுக்குள் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும்.

(3) நிர்வாகம் கூட்டுறவு அங்காடி மற்றும் கூட்டுறவு நாணய சங்கம் கூட்டுறவுத் துறையினரால் பதிவு செய்ய வேண்டிய நடவடிக்கைகளை 10—11—1977 அன்றே அதற்கு

முன்போ எடுக்கும். தொழிலாளர் பிரதிநிதிகளுக்குக் கூட்டுறவு அங்காடியில் உதவியாக இருக்கும் பொருட்டு நிர்வாகம் தனது அதிகாரி ஒருவரின் உதவியை ஒரு வருடத்துக்கு வழங்க சம்மதிக்கிறது.

(4) நிரந்தர தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் தணிக்கை செய்யப்பட்ட லாப நட்டக் கணக்கு பட்டியலில் கட்டப்பட்டுள்ள லாபத்தில் 7 சதவிகிதம் சரிசமமாகப் பிரித்து வழங்கப்படும், சென்ற வருட லாபத்தில் 7 சதவிகிதம் இருபாகமாகப் பிரிக்கப்பட்டு ஒரு பாதி வரும் ஆண்டு ஜூலை மாதத்திலும் மறு பாதி வரும் ஆண்டு டிசம்பர் மாதத்திலும் வழங்கப்படும்.

(5) தணிக்கை செய்யப்பட்ட லாப நட்டக் கணக்கில் காட்டப்பட்டுள்ள லாபத்தில் இப்படி தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் 7 சதவிகித தொகைக்கும், தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பூரிப்பு ஊதியத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

(6) தொழிற்சங்கங்கள் தங்கள் மற்றெல்லாக் கோரிக்கைகளையும் விட்டு விட்டு வேலை நிறுத்தத்தையும் வாபஸ் பெற்று திரும்பவும் வேலைக்கு வரச் சம்மதிக்கின்றனர். நிர்வாகமும் கதவடைப்பை உடனடியாக நீக்க சம்மதிக்கிறது.

(இ) கதவடைப்பை நீக்கிய பின்னரும் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் நடைபெற்றதா?

நிர்வாகம் கதவடைப்பை நீக்கி 5—9—1977 அன்று தொழிற்சாலையைத் திறந்தது. நிர்வாகம் கதவடைப்பை நீக்கிய பின்னரும் 4—9—1977 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத தொழிற்சங்கங்களைச் சார்ந்த ஊழியர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர்.

(ஈ) உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை :

இப்படி உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 6—9—1977-லிருந்து 26—9—1977 வரை சராசரியாக 650. 27—9—1977-லிருந்து எந்தவித வேலை நிறுத்தமும் இல்லை.

1978 ஏப்ரல் 7]

(உ) கதவடைப்பு நீக்கப்பட்ட பின்னர் வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை :

27—9—1977 முதல் நிர்வாகம் 2,267 தொழிலாளர்களுக்கு வேலைக்கு வராத மற்றும் மற்ற தொழிலாளர்களின் வேலையில் இடையூறு செய்தமைக்கான காரணங்களுக்காக வேலை நீக்க உத்தரவை வழங்கியது. மேலும் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் தொடர்ச்சியாக வேலைக்கு வந்து கொண்டிருந்த 1,365 தொழிலாளர்களுக்கு கார்டு வழங்கியது. இதன்பிறகு தொழிலாளர்களின் வருகைப்பதிவில் படிப்படியாக முன்னேற்றம் காணப்பட்டது. திரும்பவும் வேலைக்கு வந்த தொழிலாளர்களின் வேலை நீக்கம் ரத்து செய்யப்பட்டது. அமைதி நிலைமை திரும்பி தொழிற்சாலை தற்போது ஒழுங்காக நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS